வானவில்

VAANAVIL
ISSUE – 46 OCTOBER 2014

இதழ் - 46 ஐப்பசி 2014

# ஜனாதிபதி தேர்தலில் முற்போக்கு – ஜனநாயக சக்திகளின் நிலைப்பாடும் அணுகுமுறையும் என்ன?




இலங்கை ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமாக இப்போது பல்வேறு சர்ச்சைகள் அரசியல் அரங்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதில் ஒன்று, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை அகற்ற வேண்டும் என்பது. இன்னொன்று, தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியுமா என்பது.

இதில் ஒரு வேடிக்கையான விடயம் என்னவெனில், 1978இல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் தலைவராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன புதிய அரசியல் சாசனத்தைக் கொண்டு வந்து, நிறைவேற்று ஜனாதிபதி பதவி, விகிதாசாரப் பிரதிநிதித்துவம், விருப்பு வாக்கு முறைமை என்பனவற்றை அறிமுகப்படுத்திய போது, சிறீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட அனைத்து எதிர்க்கட்சிகளும், வெகுஜன அமைப்புகளும் அதைக் கடுமையாக எதிர்த்தன.

ஆனால் பின்னர், 1994 முதல் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் கடந்த 20 வருடங்களாக ஆட்சியில் இருந்தபோதும் அதை மாற்ற முயற்சிக்கவில்லை. அதேபோல, விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை எதிர்த்த கட்சிகள், அதிலும் குறிப்பாக சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய மற்றும் சிறிய கட்சிகள், இந்த விகிதசாரப் பிரிதிநிதித்துவ முறை இருந்தால்தான் தம்மிலும் இரண்டொருவர் நாடாளுமன்றம் செல்லக்கூடியதாக இருக்கும் என்பதால், அதைப்பற்றிப் பேசுவதை நிறுத்திக் கொண்டன.

மறுபக்கத்தில், இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை அறிமுகப்படுத்திய ஐ.தே.க, இப்பொழுது அந்த முறைமையை நீக்க வேண்டும் என குரல் எழுப்புகிறது. அந்தக் கட்சியுடன், தான் பதவிக்கு வந்தால் மூன்று மாதங்களில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்வேன் என சூளுரைத்துவிட்டு, பதவிக்கு இரண்டு தடவைகள் வந்தபோதும் அதைப்பற்றி வாயே திறக்காத சந்திரிகாவும் சேர்ந்து நிற்கின்றார்.

இந்த ‘சுத்துமாத்து’ நிலைப்பாடுகளை என்ன வகையானவை என்று வர்ணிப்பதற்கு, வழம்மிக்க மொழி என்று சொல்லப்படும் தமிழில் எமக்கு போதிய சொற்கள் இல்லாததுதான் கவலையான விடயம்.

சில வேளைகளில் ஐ.தே.கவை சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாக இருந்து, சிறீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்க்கட்சியாக இருதிருந்தால், அப்பொழுது ஐ.தே.க நிறைவேற்று அதிகாரமுறையை பாதுகாத்தும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி அதை எதிர்த்தும் பிரச்சாரம் செய்திருக்கக்கூடும்.

இதிலிருந்து ஒரு விடயம் புலனாகின்றது. அதாவது ஆட்சி அதிகாரத்துக்கு வரும் வாய்ப்பிருந்தால், இருக்கின்ற அதிகார முறையைப் பாதுகாப்பதும், அதிகாரத்துக்கு வருவதற்கான வாய்ப்பு இல்லாவிட்டால், ‘‘சீ..சீ..இந்தப் பழம் புளிக்கும்’’ என்ற கணக்காக தொனியை மாற்றிக் கதைப்பதும், முதலாளித்துவ அரசியல் கட்சிகளுக்கு ஒரு சாதாரண விடயம். எனவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை சம்பந்தமாகவோ, ஜே.ஆர்.கொண்டு வந்த 78ஆம் ஆண்டு எதேச்சாதிகார அரசியல் சாசனம் சம்பந்தமாகவோ, ஆட்சிக்கு வரக்கூடிய இரண்டு கட்சிகளுக்கும் கொள்கை

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க..

# தடை, தடை நீக்கம் எல்லாமே ஒரு கண்துடைப்பு

புலிகள் இயக்கத்தின் மீது ஐரோப்பிய ஒன்றியத்தினால் 29.05.2006 இல் விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறு, 16.10.2014 இல் லக்சம்பேர்க் நாட்டில் அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது. புலிகள் மீதான தடையை நீக்கக்கோரி நெதர்லாந்து நாட்டினை சேர்ந்த வழக்கறிஞர்கள் குழுவொன்றே, 2011 இல் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்திருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத இயக்கப்பட்டியலில் புலிகள் இயக்கம் இருப்பதைக் காரணங்காட்டியே, பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து போன்ற நாடுகளில் புலிகளுக்காக வேலை செய்த பலர் கைது செய்யப்பட்டு, வழக்குகள் தாக்குதல் செய்யப்பட்டு, அந்தந்த நாட்டு நீதிமன்றங்களினால் சிறைத்தண்டனைகள் வழங்கப்பட்டன. அவ்வாறு 2010 இல் நெதர்லாந்து நாட்டில் கைது செய்யப்பட்ட புலிகள் இயக்க சந்தேகநபர்கள் சார்பில் ஆஜராகி, அந்நாட்டு நீதிமன்றத்தில் புலிகளுக்கு தண்டனை அளிக்கப்படுவதிலிருந்து காப்பாற்ற முடியாமல்போன வழக்கறிஞர்கள் குழுவே, புலிகளின் தடைக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றில் வழக்குத் தொடுத்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமொன்றிற்கு ஆயுதம் வாங்குவதற்காக பணம் சேகரித்தது குற்றமென்ற அடிப்படையிலே நெதர்லாந்து நீதிமன்றத்தினால், அந்நாட்டில் கைது செய்யப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது. இதனால் நெதர்லாந்து நீதிமன்றத்தில் புலிகளுக்காக வாதாடிய வழக்கறிஞர்கள் குழுவினர் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைக்கு எதிராக ஒரு சட்டப்பிரச்சனையைக் கிளப்ப வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டனர். அதாவது 2009 இல் புலிகள் முற்றுமுழுதாக இலங்கையில் அழிக்கப்பட்ட பின்னர், பயங்கரவாத இயக்கப் பட்டியலில் புலிகள் தொடர்ந்து நீடிப்பது நியாயமானதா என்ற வகையில் இவர்கள் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் வழக்கொன்றினை தொடுத்தனர். இதற்கு அந்நீதிமன்றம், 2006 ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியம் விதித்த புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

இத்தீர்ப்பினை ஐரோப்பிய ஒன்றியம் செவிமடுத்து செயற்படுத்த வேண்டிய எந்த அவசியமும் கிடையாதென்பது ஒருபுறமிருக்க, இத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ள இரண்டு முக்கிய விடயங்களை கவனிப்பது மிகவும் நல்லது. முதலாவது, 2009 ஆண்டிற்கு பின்னர் புலிகள் ஆயுதம் ஏந்தவில்லையெனவும் வன்முறையற்ற வழிகளில்தான் புலிகள் போராட விரும்புகிறார்கள் எனவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயுதம் ஏந்தவில்லை என்பது முற்றுமுழுக்க உண்மையென்ற போதிலும், புலிகள் அகிம்சை பாதைக்கு திரும்பி இருப்பதாக உத்தியோகபூர்வமாக இதுவரையில் அறிவிக்காததால் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தக் கூற்றினை ஏற்க முடியாது. இரண்டாவது, இணையத்தளங்களில் வெளிவந்த தகவல்களின் அடிப்படையிலேயே ஐரோப்பிய ஒன்றியம் புலிகளுக்கு தடை விதித்துள்ளதாக தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. புலிகள் இயக்கத்தின் மனித விரோத செயல்களை அம்பலப்படுத்த இணையத்தளங்கள் எவ்வளவு தூரம் முக்கியமானதாக இருந்திருக்கின்றன என்ற உண்மை இக்கூற்றிலிருந்து துல்லியமாக தெரிகின்றது. எனினும் இணையத்தள தகவல்களுக்கு அப்பால் சென்று புலிகள் பற்றி ஐரோப்பிய ஒன்றியம் சுயாதீனமாகவும் தகவல்களை பெற்றிருக்க வேண்டுமென இத்தீர்ப்பில் மறைமுகமாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

2002 இல் ரணில்—புலிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர், நோர்வே தலைமையிலான சமாதான முயற்சியில் அங்கம் வகித்த 6 நாடுகளில் ஐரோப்பிய ஒன்றியமும் ஒன்று. இந்த ஒன்றியத்தின் பிரதிநிதிகள் இலங்கை சென்று, இலங்கை நிலைமை தொடர்பாக தெளிவான தகவல்களை நேரடியாக பெற்றிருந்தனர். 2002 ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னரான புலிகளின் யுத்த நிறுத்த மீறல்களும், இவைகள் 2009 இல் புலிகளின் அழிவிற்கு கொண்டு சென்றது வரையுமான அத்தனையும் இவர்களின் கண் முன்னேயே நடந்தன. இத்தகவல்களை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் இவர்கள் அளிக்கத் தவறியது ஏன் என்பது தெரியவில்லை.

உலகத்தில் மொத்தமாக 32 நாடுகளில் புலிகள் தடை விதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. பொதுவாக தடைவிதிக்கப்பட்டுள்ள எல்லா நாடுகளிலும் தடைக்கு முன்னர் புலிகள் பணம் சேகரித்தல், ஊடகப்பிரச்சாரம், மாவீரர் விழா, மாற்றுக்கருத்து கொண்டவர்களை கொல்லுதல், அடித்தல், மிரட்டுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். தடை செய்யப்பட்ட பின்னரும் புலிகளின் இந்த மாதிரியான செயற்பாடுகள் தொடர்ந்தன, தொடர்கின்றன. எனவே புலிகள் மீதான தடை இருந்தென்ன, இல்லாமல் விட்டென்ன?

நியாயமான நீதிமன்றம் ஒன்றின் முன்னே, 2002 இற்கு முற்பட்ட புலிகளின் செயற்பாடுகளை கணக்கிலெடுக்காது, அதற்கு பின்னர், 2009 இல் யுத்தம் முடிவடையும் வரையில் புலிகள் செய்த கொடூரங்களை வரிசைப்படுத்தியிருந்தாலே தடையை தளர்த்த வாய்ப்பில்லாமல் இருந்திருக்கும். ஒரு துரும்பு கூட இல்லாமல், புலிகள் 2009 இல் புலிகள் அழிக்கப்பட்டதன் விளைவினாலேயே இலங்கையில் புலிகளின் ஆயுத வன்முறை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இதன் அர்த்தம், இப்போது புலம்பெயர் நாடுகளில் உடைந்து சிதறிக்கிடக்கும் புலிகள், ஆயுதப்போராட்டம் மீதான மோகத்தை கைவிட்டு விட்டார்கள் என்பதாகாது. 2009 இற்கு பின்னர், இலங்கையிலுள்ள மகிந்த அரசுக்கும் மேற்கத்தைய நாடுகளுக்கும் இடையில் உறவு சீரற்றிருப்பதும் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின்னால் அரசியல் பின்னணி இருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது. *

---

**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.



நான் எப்போது தலைவராவது?

# மாவை சேனாதிராசா தமிழரசுக் கட்சியின் தலைவரா அல்லது அதன் ஒரு பிரிவின் தலைவரா?

**- கணேசவேல்**

தமிழரசுக் கட்சி வவுனியாவில் நடைபெற்ற தனது மாநாட்டில் அக்கட்சியின் செயலாளராக இருந்த மாவை சேனாதிராசாவை, கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்துள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கும் கோஸ்டி மோதல்களுக்குப் புறம்பாக, தமிழரசு கட்சிக்குள் இருக்கும் பல பிரிவுகளின் கோஸ்டிச் சண்டையில் மாவை சேனாதிராசாவை தலைவராக ஆக்குவதைத் தவிர அக்கட்சியினருக்கு வேறு வழி இருக்கவில்லை.

ஏற்கெனவே வட மாகாணசபைத் தேர்தலின் போது, தன்னை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தவில்லை என்ற மாவை சேனாதிராசாவின் கோபம் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் போன்றோர் மீது பாய்ந்திருந்தது. இந்தச் சூழ்நிலையில் கட்சியின் தலைமைப் பதவியைத் தன்னும் மாவைக்கு கொடுக்காவிட்டால், அவர் தனி வழி போய்விடுவாரோ என்ற அச்சம் கட்சியின் சில பிரிவினரிடையே ஏற்பட்டிருந்தது. அதற்கு ஒரு சமரசமாகவே மாவை சேனாதிராசாவுக்கு தமிழரசுக் கட்சியின் தலைவர் பொறுப்பு வழங்கப்பட்டது என விடயமறிந்தவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் மாவை சேனாதிராசா தலைவராக நியமிக்கப்பட்டாலும், அவர் இந்தப் பதவிக்கு தகுதியானவர் இல்லை என்ற கருத்தே பொதுவாகவும், கட்சியின் சில பிரிவுகளுக்குள்ளும் நிலவி வருகின்றது. ''இவரிலை வேலை இல்லை'' என்ற வாசகத்தை மாவை பற்றிப் பொதுவாக கேட்க முடிகிறது.

மாவையின் தகுதிகளாக 1970 ஆண்டுக்கால சிறீமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்தில் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்ட 42 தமிழ் இளைஞர்களில் ஒருவராக இருந்தது, மேடைகளில் வீராவேசமாக சொற்பொழிவு ஆற்றுவது என்பனவற்றைத் தவிர வேறொன்றையும் குறிப்பிட முடியாது என்பது பலரின் அபிப்பிராயமாக உள்ளதைக் காண முடிகிறது.

கட்சியின் முன்னைய தலைவரான இரா.சம்பந்தனிடம் இருந்த அரச பணி செய்த அனுபவம், மும்மொழி திறமை, வாதத்திறமை, பேட்டிகளின் போது சமயோசிதமாகப் பதில் சொல்லும் ஆற்றல், இராஜதந்திர நெளிவு சுளிவு எதுவும் மாவையிடம் இல்லை என்பது பொதுவான அபிப்பிராயமாக இருக்கின்றது.

அத்துடன் தமிழரசுத் தலைமை (புலிகளும் கூட) காலம் காலமாக கிழக்கு மாகாணத்தைப் புறக்கணித்து வந்த பாரம்பரியத்தின் அடிப்படையில், மாவை போன்ற யாழ்.மையவாத சிந்தனையுள்ளவர்களை கிழக்கு மாகாண மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ற கேள்வியும் சில தரப்பினரிடம் இருக்கின்றது. அவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்த போது, அவருக்கு அங்குள்ள கட்சியினர் போதிய வரவேற்புக் கொடுக்காது ஏனோ தானோ என்று இருந்ததிலிருந்து இது தெரிய வந்துள்ளது.

அதனால்தானோ என்னவோ, தமிழரசுக் கட்சியின் வவுனியா மாநாடு முடிந்த சில நாட்களில் இரா.சம்பந்தனின் திரிகோணமலை வீட்டில் கூடிய கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில், கட்சியின் அரசியல் பிரிவு என்ற புதிய பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு, அதற்கு இரா.சம்பந்தன் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதன் மூலம் மாவையின் தலைவர் பதவி அர்த்தமற்றதாக்கப்பட்டுள்ளது என்றுதான் கருத வேண்டியுள்ளது. ஏனெனில் மாவை கட்சியின் தலைவர் என்றால் அது அரசியல் தலைவர்தான். அப்படியிருக்க புதிதாக அரசியல் தலைவர் என்ற பதவி எதற்காக என்ற நியாயமான கேள்வி எழுகின்றது.

விடுதலைப் புலிகள் போன்ற முற்றுமுழுதான ஆயுதப் போராட்ட அமைப்பில் அரசியல் பிரிவு, கலாச்சாரப் பிரிவு, மகளிர் பிரிவு என பல பிரிவுகளுக்குத் தேவை இருந்தது. ஆனால் தமிழரசுக் கட்சி ஒரு ஆயுதப் போராட்ட அமைப்பு அல்ல. அது ஒரு அரசியல் கட்சி. அதன் தலைவராகத் தெரிவு செய்யப்படுபவர் அரசியல் தலைவர்தான். அப்படியிருக்க மாவையை விட்டுவிட்டு அரசியல் பிரிவு ஒன்றை உருவாக்கி அதற்கு இரா.சம்பந்தனை தலைவராக நியமித்திருப்பது, (சேனாதி) ராசாவுக்கு முடியை மட்டும் சூட்டிவிட்டு, அதிகாரங்களை உண்மையான சேனாதிபதியான சம்பந்தன் வைத்திருப்பது என்பதே அர்த்தம்.

மாவை இந்த உண்மையை உணரும் போது, சம்பந்தனின் பதவி இல்லாமல் செய்யப்படலாம் அல்லது கட்சிக்குள் பூகம்பம் வெடித்து பிளவு வரை செல்லலாம் என்பதே தற்போதைய நிலைமையாகும்.

# கிளிநொச்சியில் வைத்து ஜனாதிபதி மகிந்த தெரிவித்த
# சரியும் பிழையுமான இரண்டு கருத்துக்கள்!

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அண்மையில் வட பகுதிக்கு விஜயம் செய்து பல அபிவிருத்தித் திட்டங்களை அங்குரார்ப்பணம் செய்து வைத்தபோது கிளிநொச்சிக்கும் சென்றிருந்தார். அங்கு வைத்து அவர் இரண்டு முக்கியமான விடயங்கள் சம்பந்தமாகக் கருத்து தெரிவித்திருக்கிறார்.

அதில் ஒரு கருத்து, தமிழ் தேசியக் கூட்டமைப்பால் நிர்வகிக்கப்படும் வட மாகாணசபை 'வைக்கல் பட்டடை நாய்' போலச் செயற்படுவதாகக் கூறியிருக்கிறார்.



மற்றைய கருத்து, தமிழர்கள் தமிழீழ தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிடுவார்களாக இருந்தால், தான் இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கத் தயார் என்று தெரிவித்திருக்கிறார்.

இதில் முதலாவது விடயத்தைப் பொறுத்த வரையில் ஜனாதிபதியின் கூற்று நூற்றுக்கு நூறு வீதம் சரியானது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு வட மாகாணசபை நிர்வாகத்தைக் கைப்பற்றினால், வடக்கின் அபிவிருத்தியைப் பொறுத்த வரையில் தாமும் செய்யாது, மற்றவரையும் செய்யவிடாது வைக்கல் பட்டடை நாய் போலச் செயற்படுவார்கள் என்பதை நாம் எமது 'வானவில்' பத்திரிகையின் 2013 ஆடி (இல.31) இதழில் சுட்டிக் காட்டியிருந்தோம். (13ஆவது திருத்தத்தை ஏற்காத தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதின் நோக்கம் என்ன? என்ற முன்பக்க தலைப்புக் கட்டுரையைப் பார்க்கவும்) வட மாகாண சபைக்கு தேர்தல் நடந்து, அதைக் கூட்டமைப்பினர் கைப்பற்றிய பின்னர், அவர்கள் நடந்து கொள்ளும் முறையைப் பார்த்து ஜனாதிபதி அந்தக் கருத்தை இப்பொழுது கூறவேண்டிய நிலை வந்திருக்கிறது.

ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தின் போது பல அபிவிருத்தித் திட்டங்களின் அங்குரார்ப்பண நிகழ்வுகளில் கலந்து கொள்ளும்படி கூட்டமைப்பினருக்கு – குறிப்பாக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனுக்கு – அழைப்பு விடுத்தும், அவர்கள் அவற்றில் கலந்து கொள்ளாமல் பகிஸ்கரிப்புச் செய்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இந்திய உதவியுடன் யாழ்ப்பாணம் வரை நிர்மாணிக்கப்பட்ட புகையிரத சேவையினை ஆரம்பித்து வைத்த நிகழ்வை புறக்கணித்திருக்கிறார்கள்.

### *சுப்பராயன்*

முன்னைய தமிழ் தலைமைகளும் சரி, இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பும் சரி, இலங்கைத் தமிழர்களின் இனப் பிரச்சினை தீர்வுக்கும், அவர்களது பொருளாதார வளர்ச்சிக்கும் இந்தியா தான் உதவ வேண்டும் என எப்பொழுதும் கூறி வந்திருக்கின்றனர். ஆனால் அதேநேரத்தில் இந்திய உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட புகையிரத சேவை ஆரம்ப நிகழ்வை சின்னத்தனமான அரசியல் நோக்கங்களுக்காக புறக்கணித்திருக்கின்றனர்.


அதேநேரத்தில் சில வாரங்களுக்கு முன்னர் இந்திய உதவியுடன் புனரமைக்கப்பட்ட அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் துவக்க நிகழ்வில் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறீ, அரசாங்க அமைச்சர்கள் போன்றோருடன் கலந்து கொண்டிருந்தார். அப்படியானால் அவர் அந்த நிகழ்வையும் புறக்கணித்திருக்க வேண்டுமல்லவா? இப்பொழுது மட்டும் ஏன் இந்த பல்டியடிப்பு?

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை நிகழ்வில் பங்குபற்றிய இந்திய உயர் ஸ்தானிகர் வை.கே.சின்ஹா, வட மாகாணசபை இலங்கை அரசாங்கத்துடன இணைந்து செயற்பட வேண்டும் என 'புத்திமதி' கூறியதால் இந்திய நட்பு கசந்துவிட்டதோ என்னவோ?

கூட்டமைப்பின் புறக்கணிப்பு குறித்து கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மகிந்த, அபிவிருத்தியையும் அரசியலையும் ஒன்றாகப் போட்டு குழப்பி சின்னத்தனமான அரசியலில் ஈடுபட வேண்டாம் என கூட்டமைப்பினருக்கு அறிவுரை கூறிச்

சென்றிருக்கிறார். யார் சொல்லி என்ன? தமிழ் தலைமைகளின் வழமையான செயற்பாடே, தாம் சகலவிதமான அரசாங்க சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்களை அனுபவித்துக் கொண்டு, சாதாரண தமிழ் மக்களுக்கு அரசாங்கம் எதையும் செய்துவிடாமல் தடுப்பது தானே? அப்படியான நாய் வால்தனத்தை யாரால்தான் திருத்த முடியும்?

ஜனாதிபதியின் மற்றைய கருத்து, 'தமிழீழ கோரிக்கையைக் கைவிட்டால்தான், நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும்' என்பது சம்பந்தமானது. இந்த நகைப்புக்கு இடமான கருத்து, 'மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது' போன்றதாகும்.



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை 1978இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்த அரசியல் சாசனத்தின் மூலம் நடைமுறைக்கு வந்தது. அப்பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டை மாநாட்டில் (1976) தமிழீழ தனிநாட்டுத் தீர்மானம் நிறைவேற்றியிருந்தாலும், அதற்கான ஆயுதப் போராட்டம் எதுவும் ஆரம்பித்திருக்கவில்லை. எனவே அந்தக் கோரிக்கையை தடுக்கத்தான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை கொண்டு வரப்பட்டது என்று இன்று யாரும் வாதிட்டால் அது சுத்தமான பித்தலாட்டம்.

ஜே.ஆர். அந்த முறைமையைக் கொண்டு வந்ததின் நோக்கம் இலங்கையில் சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதியாக தான் இருந்து கொண்டு, சகலரையும் ஆட்டிப் படைப்பதற்காகத்தான். அதுமட்டுமின்றி, அவரது அரசியல் சாசனத்தின் மற்றைய அம்சங்களாக விகிதாசாரப் பிரதிநிதித்துவம், விருப்பு வாக்குமுறை போன்ற ஜனநாயக விரோத அம்சங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்துடன் தனது அரசியல் சாசனம் என்றைக்குமே மாற்றப்படக்கூடாது என்பதற்காக, மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமல் (எந்தக் கட்சியுமே அதைப் பெற முடியாது என அவர் கருதி இருந்தார்) அரசியல் அமைப்பை மாற்ற முடியாது என்ற சரத்தையும் அது உள்ளடக்கி இருந்தது. ஆனால் அவரது எதிர்பார்ப்பை இன்றைய அரசே மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெற்று தகர்த்தெறிந்து விட்டது.

ஜே.ஆர். இந்த முறைமையைக் கொண்டுவந்த நேரத்தில், ஜனாதிபதியின் சிறீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட நாட்டின் பெரும்பாலான அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், வெகுஜன ஸ்தாபனங்கள், மனித உரிமை அமைப்புகள் என அனைத்துத் தரப்பினருமே அதை எதிர்த்தனர். 1994இல் ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவுகட்டி ஆட்சிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்க, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கப்போவதாக சூளுரைத்துக் கொண்டே ஆட்சிக்கு வந்தார். ஆனால் அவர் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகப் பதவி வகித்தும் கூட, அதற்கான எந்தவொரு முயற்சியிலும் ஈடுபடவில்லை. இப்பொழுது மட்டும் மகிந்த ராஜபக்சவை எதிர்ப்பதற்காக அந்த முறையை ஒழிக்க வேண்டும் என எதிரணிகளுடன் சேர்ந்து கூப்பாடு போடுகிறார்.

எது எப்படிப் பார்த்தாலும், நிறைவேற்று ஜனாதிபதி முறைமை என்பது ஒரு தனி மனிதனிடம் ஒரு நாட்டின் முழு அதிகாரமும் குவிந்திருப்பதாகும். அது ஜனநாயக நெறிமுறைகளுக்கு மாறானதாகும். எனவே இனியும் சாக்குப்போக்குச் சொல்லி அதை நீடிக்க முடியாது. முன்பாவது புலிகளுடனான யுத்தம் ஒரு சாக்காக இருந்தது. இப்பொழுது நாட்டில் எந்தவொரு யுத்தமும் இல்லை. இனிமேலும் அவ்வாறான ஒரு சூழலுக்கு வாய்ப்பும் இல்லை.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கும், தமிழீழ கோரிக்கைக்கும் முடிச்சுப் போடுவது ஏற்க முடியாதது. ஏனெனில் உலகில் பல நாடுகளில் தமிழர்கள் இன்று பரந்து வாழ்கிறார்கள். அவர்களில் ஒரு பகுதியினரான புலிகளுக்கு ஆதரவானவர்கள் தொடர்ந்தும் தமது தமிழீழக் கனவைப் பற்றிப் புலம்பிக்கொண்டுதான் இருப்பார்கள். அதைச் சாக்காக வைத்து நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழிக்க மறுப்பது, பெரும்பான்மை சிங்கள மக்கள் உட்பட நாட்டின் அனைத்து மக்களினதும், ஜனநாயக உணர்வுகளை மறுப்பதாகும்.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பே விரும்பியோ விரும்பாமலோ தமிழீழ கோரிக்கையைத் தாம் ஆதரிக்கவில்லை என நீதிமன்றங்களில் சத்தியக் கடதாசி சமர்ப்பித்துள்ள நிலையில், புலம்பெயர் தமிழர்களில் ஒரு சிறு பகுதியினரின் வயிற்றுப் பிழைப்புக்கான தமிழீழக் கோரிக்கையை வைத்து நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழிக்க இன்றைய ஜனாதிபதி மறுத்தால், அது நாட்டை அழிவுப்பாதையில்தான் இட்டுச் செல்லும். *

# வட மாகாண சபையும் அதன் முதல்வரும் இவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுவார்களா?

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை சுதந்திரத்தின் பின்னரான 65 ஆண்டு காலமாக தீர்க்க முடியாமல் போனதற்கு, காலத்துக்காலம் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கிய தலைமைகள் கைக்கொண்ட வெறும் இனவாத அணுகுமுறைகள்தான் காரணம் என்றால் அது மிகையல்ல.

அந்த வரிசையில் இப்பொழுது புதிதாக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வந்து சேர்ந்திருக்கிறார். வாழ்நாள் முழுவதும் கொழும்பில் வாழ்ந்து கொண்டு, தமிழ் தேசியவாதிகள் சொல்லும் அகிம்சைப் போராட்டத்திலோ, ஆயுதப் போராட்டத்திலோ துளியளவும் பங்கெடுக்காமல், கொழும்பு தமிழ் மேல்தட்டு வர்க்கத்தின் சுகிப்பிற்காக நடாத்தப்படும் கம்பன் விழா போன்ற களியாட்ட நிகழ்வுகளில் மட்டுமே பங்கெடுத்து வந்தவர், முதலமைச்சரானதும் எல்லோரையும் முந்திக் கொண்டு தமிழர் விடுதலை பற்றிப் பேச ஆரம்பித்திருக்கிறார்.



வட மாகாணசபைக்கு அரசினால் ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி மக்களுக்கு நன்மை செய்ய முடியாத முதலமைச்சர், வடக்கில் அரசாங்கம் செய்யும் 'இனச்சுத்திகரிப்பு' பற்றியும், வடக்கிலிருந்து இராணுவத்தை சுத்திகரிக்க வேண்டிய தேவை பற்றியும் மட்டுமே கிளிப்பிள்ளை போல வாய் ஓயாமல் பேசி வருகிறார்.

முதலமைச்சர் பேசும் விடயங்கள் எல்லாமே தவறு என்று சொல்ல முடியாது எனினும், அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறையில் பழைய தமிழ் தலைமைகள் போன இனவாதப் போக்கிலேயே அவரும் செல்வதால், மீண்டும் தமிழ் மக்களுக்கு கையறு நிலையைத் தவிர வேறு எதுவும் கிடைக்கப் போவதில்லை.

இது ஒருபுறமிருக்க, 'வெளி எதிரி' யால் வருகின்ற ஆபத்தை விட, உள் எதிரிகளால் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றியும் முதலமைச்சர் கொஞ்சம் கவனம் செலுத்தினால் பயனாக இருக்கும் என தமிழ் மக்களில் சிலர் கருதுகின்றனர். அப்படிக் கவனம் செலுத்த வேண்டிய பல விடயங்கள் இருப்பினும், உதாரணத்துக்கு இரண்டு விடயங்களை மட்டும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்னர் 'சப்றா' என்ற பெயரில் ஒரு நிதி நிறுவனம் செயற்பட்டு வந்தது. அந்த நிறுவனத்தின் பிரதான நிர்வாகியாகச் செயற்பட்டு வந்தவர் இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஈ.சரவணபவன்!

அந்த நிதி நிறுவனம் விளம்பரப்படுத்திய கவர்ச்சிகரமான வட்டி வீதங்களைக் கண்ட யாழ்.குடாநாட்டு மக்கள் பலர், 'சப்றா' நிதி நிறுவனத்தில் ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் என கோடிக்கணக்கான பணத்தை வைப்புச் செய்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள், ஓய்வூதியர்கள், தமது பிற்காலத்துக்கு என பணத்தைச் சேமித்து வைத்திருந்தவர்கள், தமது பிள்ளைகளின் திருமணம் – கல்வி போன்றவற்றுக்காகப் பணத்தை வைத்திருந்தவர்கள் எனப் பலரும் அடங்குவர்.

ஆனால் பொதுமக்களிடம் பணத்தை சுளையாக வாங்கிய இந்நிறுவனத்தின் அதிகாரிகள் நிறுவனம் நஸ்டமடைந்துவிட்டதாகச் சொல்லி பணத்தை வாரிச்சுருட்டிக்கொண்டு தலைமறைவாகிவிட்டனர். பல வருடங்களாக அவர்கள் பொதுமக்களின் கண்களில் தென்படவில்லை. இந்த நிறுவனம் செய்த மோசடியின் அதிர்ச்சியைத் தாங்க முடியாத சிலர் மாரடைப்பால் மரணித்த சம்பவங்களும் நிகழ்ந்தன.

இருந்தும் இன்றுவரை இந்த நிறுவனத்தில் பண வைப்புச் செய்தவர்களுக்கு எந்தவிதமான இழப்பீடும் வழங்கப்படவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மு.சிவசிதம்பரம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ந.சிவபாதம் மாஸ்ரர் (புத்தொளி) போன்ற சிலரின் முயற்சியால் சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டு மோசடியில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யவும், அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் முயன்றாராயினும், அவரும், சிவபாதம் மாஸ்ரரும் மரணமடைந்தவுடன் அந்த முயற்சியும் அற்றுப் போய்விட்டது. அதன் பின்னர் இந்த நிறுவனத்தில் பொறுப்பு வகித்த சிலர் பகிரங்கத்துக்கு வந்து எவ்வித பிரச்சினையும் இல்லாமல் சுகபோகமாக வாழ்ந்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத் தமிழர்கள் மத்தியில் கடந்த நூற்றாண்டில் நடைபெற்ற மிகப்பெரிய நிதி மோசடியாக இதைக் குறிப்பிடலாம். எமில் சௌந்தரநாயகம் என்ற வட பகுதித் தமிழர் வெளிநாடொன்றில் மேற்கொண்ட மிகப்பெரிய நிதி மோசடியைத் தவிர, யாழ்ப்பாணத்திலேயே துணிகரமாக மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய நிதி மோசடி இதுதான். இந்த மோசடி ஒரு குற்றவியல் சம்பவம் மட்டுமின்றி, மிகப்பெரும் சமூகத் துரோகமுமாகும்.

எனவே, இந்த நிறுவனத்தில் பண வைப்புச் செய்தவர்களுக்கு காலம் பிந்தி என்றாலும், நீதி கிடைக்கச் செய்வது அவசியமானதாகும். பலர் அரசாங்கத்தை இது சம்பந்தமாக அணுகியும் பலன் கிடைக்காத நிலைமையில், தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக உருவாகியுள்ள வட மாகாணசபையும், அதன் முதலமைச்சரும், முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் அவர்களும் இவ்விடயத்தைத் தமது பொறுப்பில் எடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கான நடவடிக்கைகளை காலம் தாமதிக்காது மேற்கொள்ள வேண்டும்.

'சப்றா' நிதி நிறுவனத்தில் பண வைப்புச் செய்தவர்கள் பலர் இன்று உயிருடன் இல்லாவிட்டாலும், அவர்களது வாரிசுகள் இருக்கின்றனர். அவர்களைத் தொடர்பு கொண்டு அவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுத்தால், அது இந்நிறுவனத்தில் பண வைப்புச் செய்து ஏமாற்றமடைந்து, நிராசையுடன் இறந்து போனவர்களுக்கு செய்யும் பிராயச்சித்தமாக இருக்கும்.

மற்றொரு விடயம் பல வருடங்களுக்கு முன்னர் யாழ்.மாநகர சபையில் நடைபெற்ற ஊழல் சம்பந்தமானது.

யாழ்ப்பாண மாநகரசபையைப் பொறுத்தவரை மக்கள் செல்வாக்கு பெற்றவராகவும், யாழ்.நகரை நவீன நகராக கட்டியெழுப்பியவராகவும் இருந்த ஒரேயொரு முதல்வர் அல்பிரட் துரையப்பா. அவர் உயிரோடு இருக்கும் வரை தங்களது 'பருப்பு அவியாது' எனக்கண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் சிலர், அவர் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு வழிபாட்டுக்குச் சென்றிருந்த வேளை பிரபாகரன் தலைமையிலான புலிகளின் ஒரு குழுவினரைக் கொண்டு சுட்டுப் படுகொலை செய்வித்தார்கள்.

அதன்பின்னர் யாழ்.மாநகரசபை அநாதைப் பிள்ளையின் நிலைக்கு மாறியது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகம் இல்லாமல் பல ஆண்டுகள் விசேட ஆணையாளர்களால் மாநகர நிர்வாகம் நடாத்தப்பட்டது. அப்படி நிர்வாகம் செய்தவர்களில் ஒருவர் தமிழரசுக் கட்சியின் நீண்ட காலப் பிரமுகரும், வட மாகாண சபையில் தற்பொழுது அவைத் தலைவராகவும் இருக்கும் சி.வி.கே.சிவஞானம்.

அவர் யாழ்.மாநகரசபை விசேட ஆணையாளராக இருந்த காலத்தில் பெரும் பணச் செலவில் மாநகரசபை இரண்டு திட்டங்களை நிறைவேற்றியது. ஒன்று, நீண்ட தூரங்களிலிருந்து யாழ்ப்பாணம் வரும் இலங்கை போக்குவரத்து சபை பஸ்களுக்கென யாழ்.முற்றவெளி மைதானத்துக்கு அருகில் பண்ணைப் பகுதியில் புதிய பஸ்நிலையம் ஒன்று கட்டப்பட்டது. பல இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட இந்த பஸ் நிலையம் தமிழ்நாட்டிலுள்ள கோயம்புத்தூர் பஸ் நிலையம் போன்றது என புகழவும் பட்டது.

ஆனால் பெரும் பொருள் செலவில் கட்டப்பட்ட அந்த பஸ்நிலையம் சில நாட்களிலேயே பாவனையின்றி கைவிடப்பட்டது. அதற்குக் காரணம் நீண்ட தூரத்திலிருந்து வரும் பயணிகள் தமது மூட்டை முடிச்சுகளுடன் இந்த பஸ்நிலையத்தில் இறக்கி விடப்பட்டதும், குடாநாட்டிலுள்ள தமது ஊர்களுக்கு பயணிப்பதற்கு அடுத்த பஸ்சைப் பிடிப்பதற்காக யாழ்.பிரதான பஸ் நிலையத்துக்குப் போக வேண்டும். சுமைகளுடன் நடந்து போக – அதுவும் இரவு நேரங்களில் அந்த சனசஞ்சாரமற்றதும் மின்சாரமற்றதும், திருடர்கள் நிறைந்ததுமான அந்தப் பாதையால் – பிரதான பஸ்நிலையத்துக்குப் போவது சாத்தியமில்லாதது. எனவே அவர்கள் பஸ்சிற்கு கொடுத்த பணத்தை விட அதிகமான செலவில் வாடகைக் கார் ஒன்றைப் பிடித்துப் போக வேண்டும்.

இந்த நிலைமையில் அந்த பஸ் நிலைய முயற்சி படுதோல்வியைத் தழுவிவிட்டது. அதன் காரணமாக யாழ்.மாநகரப் பகுதி வரியிறுப்பாளர்களின் பல இலட்சம் ரூபா பணம் விரயமாக்கப்பட்டதுடன், இந்த திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏராளமான பண மோசடியும் நடைபெற்றதாகப் பின்னர் தெரிய வந்தது.

இதுதவிர, சி.வி.கே.சிவஞானம் விசேட ஆணையாளராக இருந்த நேரத்தில் மாநகரசபை கட்டிடத்துக்குப் பின்னால் இருந்த கடற்கரையில் சிறுவர்களுக்கென பூங்கா ஒன்றும் அமைக்கப்பட்டது. அதுவும் சில மாதங்களில் பராமரிப்பு இன்றிக் கைவிடப்பட்டது. அந்தப் பூங்கா அமைப்பதிலும் பண மோசடி இடம் பெற்றதாக அந்த நேரத்தில் குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன.

இந்த இரண்டு விடயங்கள் – அதாவது 'சப்றா' பண மோசடி, பண்ணை பஸ் நிலையம் மற்றும் சிறுவர் பூங்கா – சம்பந்தமாக இன்று வரை விசாரணைகள் எதுவும் நடாத்தப்பட்டு உண்மை கண்டறியப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. ஆனால் இதில் சம்பந்தப் பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் இன்னமும் அப்படியே இருக்கின்றன.

இதில் சம்பந்தப்பட்ட இருவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலும், பாராளுமன்றம் – வட மாகாணசபை என்பனவற்றிலும் முக்கியமான பொறுப்புக்கள் வகிக்கின்றனர். வடக்கு தமிழ் மக்களுக்காக ஆகாயத்தையும் வில்லாக வளைப்பேன் என்று புறப்பட்டிருக்கின்ற முதலமைச்சர் விக்னேஸ்வரன், அதுவும் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்து நீதித் தராசை சம நிலையாகப் பிடித்தவர் என்று கருதப்படுகின்ற ஒருவர், தனது கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூட, இந்த மோசடிகளில் ஈடுபட்டவர்களை கண்டறிய ஒரு ஆணைக்குழுவை அமைத்து செயற்பட வேண்டும் என்பதுதான் வடக்கு மக்களின் கோரிக்கையாகும்.

முதலமைச்சர் இதைச் செய்வாரா?

**வி.பரந்தாமன்**
**(நல்லூர் – யாழ்ப்பாணம்)**

---

எல்லா நாடுகளிலும் பாட்டாளிகளுக்கு ஒரேவிதமான நலன்களும். ஒரேவிதமான எதிரியும்தான் உண்டு. இவர்களை ஒரேவிதமான போராட்டம்தான் எதிர்நோக்கியுள்ளது. பாட்டாளி வர்க்கத் திரளினர் தமது இயற்கையின் காரணமாகவே தேசியவாத மூடநம்பிக்கைகளிலிருந்து விடுபட்டவர்கள். பாட்டாளிகளால் மட்டுமே தேசியப் பிரிவை அகற்ற முடியும். விழித்தெழும் பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே பல்வேறு தேசிய இனங்களுக்கு இடையே சகோதரத்துவத்தை நிலைநாட்ட முடியும்.

*- ஏங்கெல்ஸ்*

---

எம்முடைய இலக்கியமும் கலையும் அடிப்படையாகத் தொழிலாளர்கள், விவசாயிகள், படைவீரர்களுக்கானவை. பரவலாக்குதல் என்பதன் பொருள் அவர்களிடம் பரவலாக்குதல். தராதரங்களை உயர்த்துதல் என்பதன் பொருள் அவர்களுடைய தற்போதைய நிலையிலிருந்து, அந்த மட்டத்திலிருந்து முன்னேற்றுவது என்பதாகும். அவர்களுக்குச் சாதகமானதும், அவர்களால் உடனே ஏற்றுக் கொள்ளக் கூடியதும் எதுவோ அதையே நாம் பரவலாக்க வேண்டும். எனவே, அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு முன், அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளும் பணி இருக்கிறது. தராதரங்களை உயர்த்துவதற்கு இது இன்னும் அதிகமாகப் பொருந்தும்.

*- மாவோ*

# தமிழகத்தில் பெரும்பாலான நாதஸ்வரக் கலைஞர்கள் பசியும் பட்டினியுமாக இருக்கிறார்கள்!

***-'தில்லானா மோகனாம்பாள்' புகழ் நாதஸ்வரக் கலைஞர் பொன்னுச்சாமி கூறுகிறார்***

'தில்லானா மோகனாம்பாள்' படத்தில் 'நலந்தானா உடலும் உள்ளமும் நலன்தானா?' என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப நாதஸ்வரம் இசைத்தவர்கள் எம்.பி.என்.சேதுராமன், எம.பி.என்.பொன்னுச்சாமி சகோதரர்கள். அவர்களது அந்த இசையால் கவரப்படாதவர்கள் எவருமே இல்லை என்று சொல்லலாம்.

அவர்களில் பொன்னுச்சாமி மட்டும்தான் இன்றும் 80 வயதைக் கடந்தும் வாழ்ந்து வருவதுடன், மதுரை மீனாட்சி அம்மன் கோவில் உட்பட பல கோவில் விழாக்களில் தொடர்ந்தும் வாசித்து வருகிறார்.

அவர் சமீபத்தில் 'ஆனந்த விகடன்' இதழுக்கு வழங்கிய ஒரு பேட்டியில் நாதஸ்வர இசைக்கருவி குறித்தும், தமிழக நாதஸ்வரக் கலைஞர்களின் இன்றைய நிலை குறித்தும் பின்வரும் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்:

''நாதஸ்வரத்தின் நீளம் பலவாறாக இருக்கும். மிகப் பழங்காலத்தில் 18.25 அங்குல நீளமாக இருந்தது. (சுருதி 4.5 கட்டை) பல மாறுதல்களுக்குப் பின் 1941~ம் ஆண்டில் திருவாடுதுறை டி.என்.இராஜரத்தினம் பிள்ளை பல முயற்சிகள் செய்து 34.5 அங்குல நீளமும், 2 கட்டை சுருதியும் கொண்ட நாதஸ்வரத்தைக் கொண்டு வந்தார். இதைப் பாரி நாதஸ்வரம் என்பர். நீளம் குறைந்த நாதஸ்வரம் திமிரி எனப்படும்.

இக்கருவி பொதுவாக ஆச்சா மரத்தினால் நரசிங்கன் பேட்டை, தெரெழுந்தூர், வாஞ்சூர், திருவானைக்காவல் போன்ற ஊர்களில்






அதற்கெனவுள்ள ஆச்சாரிகளால் மிகவும் சிறப்பாகச் செய்யப்படுகிறது.

நாதஸ்வரத்தில் காற்றை உட் செலுத்தி ஊதுவதற்கு உதவுவது 'சீவாளி' (ஜீவ ஒலி). காவிரிக் கரையில் விளையும் கொருக்கன் புல்லை வெட்டியெடுத்து, நிழலில், பனியில், இளஞ்சூரிய வெயிலில் என 15, 15 நாட்கள் காய வைத்து, வெட்டி சிறு துண்டுகளாக்கி, நெல் மற்றும் மாமிசத்தோடு சேர்த்து வேகவைத்து, ஆறு மாதம் பதப்படுத்தி உருவாக்குவார்களாம். திருவாடுதுறை, திருவிழிமிழலை, திருவிடைமருதூர் போன்ற ஊர்களில் சீவாளி செய்யப்படுகின்றது.

பெரும்பாலான நாதஸ்வரக் கலைஞர்கள் வெளியே சொல்ல முடியாம பசியும் பட்டினியுமா இருக்கிறாங்க. இன்னும் சொல்லப்போனால், நாதஸ்வரக் கலைஞர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழகத்தில் முப்பத்தைந்தாயிரம் கோவில்களில் நாதஸ்வரக் கலைஞர்கள் இல்லை. அந்த இடங்களில் நாதஸ்வரக் கலைஞர்களை நியமித்தாலாவது பலருக்கு வேலை கிடைக்கும்.

இவ்வாறு கூறியிருக்கிறார் 'தில்லானா மோகனாம்பாள்' புகழ் நாதஸ்வரக் கலைஞர் பொன்னுச்சாமி

# யாழ்ப்பாணத்தில் திருவள்ளுவர் தகப்பனாரின் குறுவாள்!

**கேள்வி:** குறளுக்கு இலங்கையிலும் வரவேற்பு இருந்ததா?

**பதில்:** இருந்தது. பல பண்டிதர்கள் குறளுக்கு விளக்கம் தந்துள்ளனர். திருக்குறள் அகராதிகளும் வெளியாகி உள்ளன. கதிரேசபண்டிதர் குறள் அகராதி பெருமை உடையது. ஆறுமுக நாவலர், கணேச அய்யர் போன்றவர்கள் குறளின் பெருமை உணர்ந்தவர்கள்.

**உபரித் தகவல்:** சிற்சபை என்ற யாழ்ப்பாணத் தமிழர் வீட்டில் பூஜை அறையில் இரண்டு குறுவாள்கள் இருந்தன. ஒன்று ஏலேல சிங்கனாரின் உடைவாள். இன்னொன்று திருவள்ளுவரின் தந்தையார் மயிலைநாதரின் குறுவாள். இனக்கலவரத்தில் சிற்சபை மேலை நாடுகளுக்குத் தப்பிச் சென்றபோது ஒரு பிரிட்டிஸ்காரருக்கு இந்த வாள்களை விற்றுவிட்டார் என்ற செய்தியை நான் படித்தது உண்டு.

*('கலைமகள்' தாமிரவருணி கேள்வி - பதில் பகுதியிலிருந்து)*

# தேசபிதாவின் மறுபக்கம்

''...இதே காலகட்டத்தில் ஜாம்செட்பூரில் டாட்டாவின் இரும்பு ஆலையில் தொழிற்சங்க அங்கீகாரம் தொடர்பாக ஒரு பிரச்சினை எழுந்தது. டாட்டாவிற்கு ஆதரவாக காந்திஜி சென்று தொழிலாளர்கள் மத்தியில் பேசினார். டாட்டாவின் நிபந்தனைகளைத் தாராளமாக ஒப்புக்கொள்ளும்படி அவர் தொழிலாளர்களுக்கு ஆலோசனை சொன்னார். தனது உரையினை ''நான் முதலாளிகளின் நண்பனாக, டாட்டாவின் நண்பனாக இங்கே வந்தருக்கிறேன்'' என்றே ஆரம்பித்தார். ஒருபுறத்தில் மேற்போக்காக நவீன ஆலைத் தொழில்களை விமர்சனம் செய்து கொண்டிருந்த காந்திஜி, ஏதோ

முதலாளித்துவத்தின் எதிரி போலத் தன்னைக் காட்டிக் கொண்டிருந்த காந்திஜி, டாட்டாவிடம் செல்லும்பொழுதோ அவரது பணிகளைப் பாராட்டிப் பேசினார்.

அதே போன்று அகமதாபாத் பஞ்சாலைத் தொழிலாளர்கள் தங்களது பம்பாய்த் தோழர்களின் போராட்ட வழியில் நடைபயில முயன்றபொழுது, அங்கே சென்ற காந்திஜி ''உண்மையான ஊழியன் ஊழியம் பெறாமல்கூட யஜமானுக்கு ஊழியம் புரிவான்'' எனச் சொல்லி, முதலாளிமார்களின் கஸ்டங்களை எடுத்துச் சொல்லி ''அப்படிப்பட்ட நேரத்தில் அதிகக் கூலி கேட்காமலிருப்பது உங்கள் கடமையாகும்'' எனப் போதித்தார்.''

***- அருணன் எழுதிய 'இந்திய கம்யூனிச இயக்க வரலாறு' என்ற நூலிலிருந்து***

## ஒரு தனி மனிதன் வாழ 1000 அறைகள் கொண்ட மாளிகை!

துருக்கி ஜனாதிபதி Recep Tayyip Erdogan வசிப்பதற்காக 20 ஹெக்டேர்கள் பரப்பளவு நிலத்தில் சுமார் 1,000 அறைகளும், நிலக்கீழ் சுரங்க அமைப்புகளும், நவீன புலனாய்வு எதிர்ப்பு வசதிகளும் கொண்ட மாளிகை ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இந்த மாளிகை அமெரிக்க வெள்ளை மாளிகை, பிரித்தானியாவின் பக்கிங்காம் அரண்மனை, ரஸ்யாவின் கிரெம்ளின் மாளிகை என்பவற்றை விடப் பெரியது. இதற்கு ஆகப்போகும் செலவு 350 மில்லியன் டொலர்களாகும்.

இந்த மாளிகை அமைய இருக்கும் இடம் முன்பு துருக்கியின் தேச பிதாவான Mustafa Kemal Ataturk அவர்களின் தனிப்பட்ட தோட்டம் அமைந்திருந்த இடமாகும்.

*தகவல்: த நியூ யோர்க் ரைம்ஸ்*

## நல்ல மீனை எப்படி கண்டு பிடிப்பது?

- தோல் கண்ணாடி போல் பளபளப்புடன் இருக்கும்.
- கடல் பாசி மணம் வீசும்.
- கண்கள் பளபளப்பாகவும் குவிந்தும் காணப்படும்.
- செதில்கள் நல்ல சிவப்பு நிறத்தில் காணப்படும்.
- வயிற்றுப் பகுதி உப்புசம் இன்றி இருக்கும். விரலால் அழுத்தினால் குழி விழாமல் விறைப்புத் தன்மையோடு இருக்கும்.
- வெளிறிய தன்மையோடும், அழுகிய முட்டை (அமோனியா) வாடையுடனும் இருக்கக்கூடாது.
- இந்தத் தகவலை நாகபட்டினம் மீன்வளப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்

***தகவல்: கல்கி***

## *முந்திரிகைப்பழத்தின் நன்மைகள்*

கறுப்பு, பச்சை, கருஞ்சிவப்பு உள்ளிட்ட நிறங்களில் இருக்கும் முந்திரிகைப் பழங்களில் விற்றமின் கே, சி, பி 1, பி 6 போன்ற சத்துகள் உள்ளன. இதுமட்டுமல்லாமல் பொட்டாசியமும் முந்திரிகையில் அதிகம் காணப்படுகின்றன. முந்திரிகையில் குறைந்த அளவு கிளைசீமிக் இன்டெக்ஸ் மற்றும் பைட்டோ நியூட்ரின்ட்டுகள் இருப்பதால் நீரிழிவு நோயாளிகளுக்கு உகந்த பழமாக கூறப்படுகிறது.

நீரிழிவு நோயாளிகள் இதனை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்படுவதோடு இன்சுலின் சுரப்பும் அதிகரிக்கும். முந்திரிகையில், ஃப்ளேவோனாய்டுகளுகள் ஒன்றான க்யூயர்சிடின் இருப்பதால், அவை உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வழி செய்யும்.

நன்கு கனிந்த முந்திரிகை ஜூஸ் சாப்பிட்டால் ஒற்றைத் தலைவலியை தடுக்கலாம். அதிலும் நாள்பட்ட தலைவலியாக இருந்தால், தினமும் காலையில் தண்ணீர் சேர்க்காத முந்திரிகை ஜூஸ் குடித்து வந்தால் விரைவில் குணமாகும்.

இவை தவிர கண் பாதுகாப்பிலும் முந்திரிகைப்பழம் முக்கிய பங்கு வகிக்கிறது. முந்திரிகைப்பழத்தினை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் கண் விழித்திரை அழிவில் இருந்து பாதுகாக்கப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## இலங்கைக்கு 62ஆவது இடம்

இந்த வருடத்துக்கான செழுமையான நாடுகளின் வரிசைப் பட்டியலில் இலங்கை 62ஆவது இடத்தில் தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. Legatum Institute என்ற நிறுவனம் 142 நாடுகள் மத்தியில் இந்த ஆய்வை மேற்கொண்டிருந்தது.

இந்த ஆய்வில் முதல் 10 நாடுகளின் வரிசையில் நோர்வே, சுவிற்சலாந்து, நியூசிலாந்து, டென்மார்க், கனடா, சுவீடன், அவுஸ்திரேலியா, பின்லாந்து, நெதர்லாந்து மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பன தெரிவாகியுள்ளன.

பிரித்தானியா 13ஆவது இடத்திலும், சீனா 54ஆவது இடத்திலும், ரஸ்யா 68ஆவது இடத்திலும், இந்தியா 102ஆவது இடத்திலும் தெரிவாகி இருக்கின்றன.

ஆகக் கடைசியான 142ஆவது இடத்தை மத்திய ஆபிரிக்க குடியரசு பெற்றுள்ளது.

## அமெரிக்க சனத்தொகையில்.....

அமெரிக்க சனத்தொகையில் சுமார் 48 மில்லியன் மக்கள் (4 கோடி 80 இலட்சம்) உணவுப் பாதுகாப்பில்லாமல் (Food Insecure) - நவீன வார்த்தையில் சொல்வதானால் பட்டினியில் ~ வாழ்கின்றனர். இவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் வெள்ளை இனத்தவர்கள். அரைவாசிக்கு மேற்பட்டோர் நகரங்களுக்கு வெளியே வாழ்கின்றனர்

*தகவல்:* National Geography *சஞ்சிகை*

*

# இரு முற்போக்கு எழுத்தாளர்களின் மறைவு:

## காவலூர் இராசதுரை (மரியாம்பிள்ளை டேவிட் இராசதுரை)



*1931-2014*

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் நீண்டகால உறுப்பினரும், தலைமைக்குழு உறுப்பினருமான காவலூர் இராசதுரை 2014 ஒக்ரோபர் 14ஆம் திகதி தமது 83ஆவது வயதில் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் காலமானார்.

1950களில் தொடங்கி சுமார் அரை நூற்றாண்டு காலம் இலங்கையின் எழுத்து, ஒலிபரப்பு, திரைப்படம், தொலைக்காட்சி, விளம்பரம் என பல துறைகளில் கால் பதித்து சாதனை படைத்தவர் காவலூர் இராசதுரை.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணிபுரிந்த அவர், பல பரிசுகள் பெற்ற தர்மசேன பத்திராஜ இயக்கிய 'பொன்மணி' திரைப்படத்துக்கும் கதை - வசனம் எழுதினார். தனது சொந்த விளம்பர நிறுவனம் ஒன்றை உருவாக்கி அதிலும் கொடிகட்டிப் பறந்தார்.

அவரது எழுத்துலகின் அடையாளங்களாக 'குழந்தை ஒரு தெய்வம்', 'ஒருவகை உறவு' என்ற இரண்டு சிறுகதைத் தொகுதிகளும், 'வீடு யாருக்கு?' என்ற குறுநாவலும், 'விளம்பரத்துறை - தோற்றம், வளர்ச்சி, ஆதிக்கம்' என்ற கட்டுரைத் தொகுதியும் வெளிவந்துள்ளன.

அவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு 'வானவில்' தனது ஆழ்ந்த அனுதாபங்களையும், அவருக்கு தனது அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறது.

## ராஜம் கிருஸ்ணன்



*1925-2014*

**த**மிழகத்தின் முன்னோடி பெண் முற்போக்கு எழுத்தாளர்களில் ஒருவரான ராஜம் கிருஸ்ணன் தமது 90 ஆவது வயதில் 2014 ஒக்ரோபர் 20ஆம் திகதி காலமானார்.

முதுமை, சுகவீனம் என்பன காரணமாக நடக்க முடியாமல் படுத்த படுக்கையாக இருந்த அவரை, கடந்த 5 வருடங்களாக போரூர் இராமச்சந்திரா மருத்துவமனை பராமரித்து வந்தது.

தனது 20ஆவது வயதில் எழுதத் தொடங்கிய அவர், இதுவரை 40 நாவல்கள், 20 நாடகங்கள், 2 வாழ்க்கைச் சரிதைகள், பல சிறுகதைத் தொகுதிகள் உட்பட 80 நூல்கள் வரை எழுதியுள்ளார். அவரது 'வேருக்கு நீர்' நாவலுக்கு 1973இல் சாகித்திய அக்கடமி பரிசு வழங்கப்பட்டது. 2009இல் அவரது எழுத்துகளை தமிழக அரசு தேசவுடைமையாக்கியது. பொதுவாக இறந்துபோன எழுத்தாளர்களின் எழுத்துக்களையே தேசவுடைமையாக்குவது வழமை. ஆனால் இவர் உயிருடன் இருக்கும் போதே அந்தக் கவுரவம் வழங்கப்பட்டது.

அவர் மீனவர்கள் பிரச்சினையை வைத்து எழுதிய 'அலைவாய்க்கரையில்', உப்புத் தொழிலாளர்களை வைத்து எழுதிய 'கரிப்பு மணிகள்' போன்ற நாவல்கள் பலரதும் கவனத்தை பெரிதும் ஈர்த்த நாவல்களாகும். இந்த நாவல்களை எழுதுவதற்காக அவர் மீனவ மக்களுடனும், உப்புத் தொழிலாளர்களுடனும் சில நாட்கள் வாழ்ந்து நேரடி அனுபவங்களைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பித்தக்கதாகும்.

இவை தவிர, மேலும் பல நாவல்களையும் அவர் எழுதியுள்ளார். அவரது கதாபாத்திரங்கள் மாடிவீட்டு ஜமீன்தார்களோ, கோடீஸ்வரர்களான முதலாளிகளோ அல்ல. அன்றாடம் காய்ச்சிகளான தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், சிறைக் கைதிகள் போன்ற எளிய மனிதர்களையே அவர் தனது படைப்புகளில் சித்தரித்தார்.

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக மட்டுமின்றி, பெண்ணடிமைத்தனத்துக்கு எதிராகவும் முன்னணியில் நின்று குரல் எழுப்பி வந்த அவர், பெண் விடுதலை சம்பந்தமாகவும் ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.

அன்னாரின் மறைவையொட்டி 'வானவில்' அவருக்கு தனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

*



# கொஸ்லாந்தை மனிதப் பேரழிவு இயற்கையின் சீற்றமா? மனிதனினால் ஏற்படுத்தப்பட்ட பேரழிவா?

- பன்னீர்ச்செல்வம் -

*__2014__ ஒக்ரோபர் 29ஆம் திகதி அன்று இலங்கையின் பதுளை மாவட்டம் ஹல்துமுல்ல கிராமத்திலுள்ள கொஸ்லாந்தை தேயிலைத் தோட்டத்தில் மிகப்பெரிய மனிதப் பேரவலம் ஒன்று நிகழ்ந்தேறியது. கடும் மழை காரணமாக ஏற்பட்ட மண் சரிவில் அந்தத் தோட்டத்தில் லயன்களில் வாழ்ந்து வந்த நூற்றுக்கணக்கானவர்கள் உயிருடன் மண்ணுக்குள் புதையுண்டு மரணித்துப் போயினர்!*

*இந்த அனர்த்தம் குறித்த புள்ளிவிபரங்களை அரசு அதிகாரிகளும், ஊடகங்களும் முன்னுக்குப் பின் முரணாக வெளியிட்டு வருவதால், இன்னமும் சரியான தகவல்களை அறிய முடியவில்லை.*

*இருப்பினும் இதுவரை கிடைத்த தகவல்களின்படி, இந்தச் சம்பவத்தில் 38 பேர் மரணித்துள்ளனர், 192 பேர் காணாமல் போயுள்ளனர், 75 குழந்தைகள் அனாதரவாகியுள்ளனர், 63 வீடுகள் முற்றாக அழிந்து போயுள்ளன, 140இற்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. ஒரு சிறிய தோட்டப் பிரதேசத்தில் ஏற்பட்ட இந்தப் பிரளயம் மிகவும் பாரதூரமானது.*

*இந்தப் பேரழிவுக்கு அரசாங்கம்தான் காரணம் என வழமைபோல எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. அரசாங்கமோ, 'இயற்கையின் சீற்றத்துக்கு யார்தான் என்ன செய்ய முடியும்?' என்ற பாணியில் காரணம் கூறுகின்றது. ஆனால் இந்த மாதிரியான மண் சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்கள் இலங்கையில் நடைபெற்றது இதுதான் முதல் தடவையல்ல. இதற்கு முன்பும் மலையகத்தின் பல பகுதிகளில் மண் சரிவு ஏற்பட்டு பல உயிர்கள் அநியாயமாக மாண்டு போயுள்ளன. இலங்கையிலேயே மிகவும் ஏழ்மையான நிலையில் வாழும் இந்த மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் கண்ணீர் கதை தொடர்கதையாகவே இருந்து வருகிறது.*

*பொதுவாக இந்தகைய அழிவுகளுக்கு இயற்கையின் மீது பழி சுமத்துவது ஒரு வழமையாக இருந்து வருகிறது. பொதுவாக பூகம்பம், சூறாவளி, சுனாமி போன்ற அனர்த்தங்களுக்கு இயற்கையைக் காரணம் கூறலாம். அதுவும்கூட தற்போதைய நவீன விஞ்ஞான ஆய்வுகளின்படி, மனிதனின் கட்டுமீறிய செயற்பாடுகளே இயற்கை சீற்றம் கொள்வதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் இலங்கையின் மலையகப் பகுதிகளில் தொடர்ச்சியாக ஏற்படும் மண் சரிவுகளைக் ஒருபோதுமே கட்டுப்படுத்த முடியாதா என்ற கேள்வி எழுகின்றது.*

*முதலில் இந்த மண் சரிவு அபாயம் இயற்கையால் ஏற்படுவதா அல்லது மனிதனால் ஏற்படுத்தப்பட்டதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். வெளித் தோற்றத்துக்கு இது இயற்கை விளைவிக்கும் விபரீதம் எனத் தோன்றினாலும், உண்மையில் மனிதனே அதன் காரணகர்த்தா. ஏனெனில் எப்பொழுது பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் இலங்கையைக் கைப்பற்றி, தென்னிந்தியாவிலிருந்து கூலித் தொழிலாளர்களைக் கொண்டு வந்து, இந்த மலையகப் பகுதிகளில் தேயிலை, இறப்பர், கொக்கோ தோட்டங்களை உருவாக்கினார்களோ, அப்பொழுதே இந்த அழிவு ஆரம்பமாகிவிட்டது. அதற்கு முதல் இந்த மலைகளில் உள்ள மண்ணை இறுகப் பிடித்தபடி*

செழிப்பான காடுகள் இருந்தன.

அந்தக் காடுகள் மண் சரிவுகளைத் தடுத்ததுடன், மழை வீழ்ச்சியை ஏற்படுத்தி, அருவிகளையும், நீர்வீழ்ச்சிகளையும் உருவாக்கி, சுற்றுச்சூழலை ஒரு தாய்போலப் பாதுகாத்தன. எப்பொழுது வெள்ளையன் பணம் பண்ணுவதற்காக இந்தக் காடுகளை அழித்து தோயிலைத் தோட்டங்களை உருவாக்கினானோ, அன்றே இந்த மலைகளின் மண்ணுக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது. காடுகள் அழிந்ததால், மழை குறைந்து வரட்சி ஏற்படுவதும், மழை கூடினால் மண் சரிவு ஏற்படுவதும் மலையகத்தின் தொடர்ச்சியான வரலாறாகிப் போனது. இதுதான் உண்மை.

இலங்கையை அரசாட்சி புரிந்த மன்னர்களில் பிரசித்தமானவனான மகாபராக்கிரமபாகு மன்னனே, இலங்கையில் ஏராளமான குளங்களையும், அணைக்கட்டுகளையும், கால்வாய்களையும் உருவாக்கி, இலங்கைக்கு என ஒரு பிரத்தியேகமான நீர்ப்பாசன முறையை உருவாக்கியவன். அவன் ஒருமுறை கூறும் பொழுது, "இலங்கையின் ஒரு சொட்டு நீரையும் கடலுக்குள் போக அனுமதிக்கக்கூடாது" என்றான். அவ்வளவு தூரம் நீரின் பயன்பாட்டின் முக்கியத்துவம் பற்றி அறிந்திருந்தான்.

ஆனால் இன்று என்ன நடக்கிறது? மூதூர் கடலில் சென்று கலக்கும் மாவலி கங்கை நீரையும், கொழும்பில் கலக்கும் களனி கங்கை நீரையும் பாருங்கள். மலையில் ஊற்றெடுக்கும் போது பளிங்கு போல தூய்மையாக இருக்கும் அந்த நீர், பின்னர் மண்ணிறமாக மாறி விடுகின்றன. ஏன் அப்படி மாறுகின்றன? அவை தாம் வரும் வழியில் உள்ள மலையக மண்ணை அரித்து வருவதால்தான் அந்த நிறத்தில் இருக்கின்றன. இதைப் பார்த்த ஒரு பிரித்தானிய புவியியலாளன், "இலங்கை ஒவ்வாரு நிமிடமும் கடலுக்குள் கொண்டு செல்லப்படுகின்றது" என்று சொன்னதாக ஒரு தகவல் உண்டு.

பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட இந்த அழிவுச் செயலை, எமது நாடு அவர்களிடமிருந்து விடுதலை பெற்ற பின்பு சீர்செய்திருக்க வேண்டும். ஆனால் சுதந்திரத்தின் பின் பதவிக்கு வந்த எந்தவொரு அரசும் அதைச் செய்யவில்லை. பிரித்தானியரின் சொத்துகளை நாட்டுடைமையாக்கிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் கூட அதைச் செய்யவில்லை.

இந்த மண் சரிவைத் தடுப்பதற்கான வழிவகைகள் இல்லாமல் இல்லை. அதற்கான வழிமுறைகள் குறித்து இலங்கையின் இடதுசாரித் தலைவர்கள் பல சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன்படி மீண்டும் மலையகப் பகுதிகளில் காடுகளை உருவாக்க வேண்டும். முழு மலையகத்திலும் காடுகளை உருவாக்குவது உடனடியாகச் சாத்தியமில்லாவிடினும், தேர்ந்தெடுத்த சில பகுதிகளிலாவது முதலில் காடுகளை உருவாக்கலாம். அதன் மூலம் இயற்கைச் சூழலை மீண்டும் சமனிலைப்படுத்துவதுடன், தோட்டப் பொருளாதாரத்தில் தங்கி நிற்கும் நமது பொருளாதார அமைப்பையும் பன்முகப் பொருளாதாரத்துக்கு மாற்ற முடியும்.

ஆனால் தற்போது மாறி மாறி ஆட்சிக்கு வரும் இரண்டு முதலாளித்துவ அரசியல் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் இந்த மாதிரியான தூரநோக்குடைய திட்டங்களை அமுல்படுத்துவார்களா என்பது கேள்விக்குறியே. அந்நிய நிதி உதவிகளில் தங்கி நிற்கும் அவர்கள் மண் சரிந்தால் என்ன, மக்கள் அழிந்தால் என்ன என்ற மனோபாவத்தில் செயற்படும் வரை, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வருமா என்பது சந்தேகமே. ஆனால் அதற்காக மக்கள் வாளாவிருக்காமல் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி இடைவிடாது இயக்கம் நடாத்துவது முக்கியம். *

# தோழர் மு.கார்த்திகேசன் நினைவுப் பேருரை

இலங்கை கம்யூனிச இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும், வடபுலத்தில் அதை கட்டி எழுப்பியவரும், சிறந்த கல்விச் சிந்தனையாளருமான தோழர் மு.கார்த்திகேசன் அவர்களது மறைவின் 37ஆவது நினைவுப் பேருரை 2014 ஒக்ரோபர் 11ஆம் திகதி கொழும்பு – வெள்ளவத்தை தர்மராம வீதியிலுள்ள பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நெடுந்தீவு இரா.தருமலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், 'இலங்கைத் தமிழ் பண்பாட்டுத் தளத்தில் முற்போக்கு கலை இலக்கியத்தின் வகிபாகம்' என்ற தலைப்பில் ஓய்வுநிலைப் பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு உரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியை இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.

# இந்தியர்களின் மரணத்தில் குளிர் காய்ந்த பிரித்தானியா

இந்தியா பிரித்தானிய ஆட்சியின் கீழ் இருந்த காலகட்டத்தில் 1943 – 44 ஆண்டுகளில் மிகப்பெரிய உணவுப் பஞ்சம் அங்கு ஏற்பட்டது. குறிப்பாக வங்காளம், பீகார், ஒரிசா போன்ற பகுதிகளில் மிகக் கொடூரமான பஞ்சம் தலைவிரித்தாடியது. இதன் காரணமாக சுமார் 50 இலட்சம் மக்கள் பட்டினியால் மரணித்தனர்.

ஆனாலும் இந்தியாவுக்கே 40 இலட்சம் தொன் உணவு பற்றாக்குறையாக இருந்த அந்த நேரத்தில், பிரித்தானிய காலனித்துவ அரசு இந்தியாவிலிருந்து 10 இலட்சம் தொன் தானியத்தை தனது நாட்டுக்கு கப்பலேற்றியது. *

# இலங்கை தமிழர் பிரச்சினையை முன்வைத்து அரசியல் பேசுவது ஏற்றுக்கொள்ள முடியாதது

**மார்க்சிஸ்ட் மத்தியக் குழு உறுப்பினர் உ.வாசுகி**



தமிழகத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினையை வைத்தே அரசியல் பேசும் சூழல் நிலவுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் உ.வாசுகி தெரிவித்தார்.

திருப்பூர் மாவட்டம், உடு மலைப்பேட்டை, அடுத்துள்ள ஜல்லிபட்டியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய மாநாடு திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் நடைபெற்றது. அதில் கலந்து கொள்வதற் காக வந்த உ.வாசுகி செய்தி யாளர்களிடம் நேற்று கூறியதாவது:

பொதுமக்கள் தங்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளைக்கூடப் போராட்டம் மூலமாகத்தான் பெற வேண்டி யுள்ளது. அதற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து விழிப் புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

நாடு முழுவதும் பெரும்பாலான குடும்பங்களில் பெண்களின் நிலை மிக மோசமாக உள்ளது. பெண்களின் பங்கேற்பு இல்லாத போராட்டங்கள் முழுமை அடை யாது. 1960-களில் மாநில மக்களின் உரிமைகளை திமுக முன் வைத்த போது அதைஇடதுசாரிகள் ஆதரித்து, அவர்களுடன் இணைந்து போராட்டம் நடத்தின. காலப்போக்கில் திராவிடக் கட்சி களின் வீரியம் குறைந்துள்ளது.

1990-களுக்குப் பிறகு நவீன தாராளமயமாக்கலால் மாநிலத்தில் உள்ள முதலாளிகளுக்கு, மத்திய ஆட்சியில் பங்கேற்கும் வாய்ப்பு அமைந்தது. அதனால் திராவிட இயக்கங்கள் தங்களது அடிப்படை கோட்பாடுகளை கைவிட்டுள்ளன. மாநில அரசுகளின் உரிமைகளை மீட்டெடுப்பதில் திராவிட கட்சி களின் செயல்பாடுகள் பலவீனப் பட்டு, தற்போது எதிர்மறையாக செயல்படத் தொடங்கியுள்ளன. பூதாகரமான விளம்பரங்கள், தனி நபரை துதிபாடுவது போன்றவை அதிகரித்துள்ளன.

தமிழர் பிரச்சினை என்றால் அது இலங்கைத் தமிழர் பிரச்சினை யாக மட்டும்தான் பார்க்கப்படு கிறது. இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத் தில்லை. ஆனால், தமிழகத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினையை வைத்தே அரசியல் பேசும் சூழல் நிலவுகிறது. இதை மார்க்சிஸ்ட் களால் ஏற்றுக்கொள்ள முடிய வில்லை.தாராளமயமாக்கல் மூலம் வேலைவாய்ப்பற்ற வளர்ச்சி தான் உள்ளது. படிப்புக்கேற்ற வேலைவாய்ப்புகள் சுருங்கிக் கொண்டே வருகின்றன. அதனால் இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

சமீப காலமாக பெண்கள் மீதான வன்முறை அதிகரித்து வருகிறது. இதுபோன்ற சம்பவங்கள் தமிழகத் திலும் நடைபெறுகிறது. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் இல்லையா?, அவர்களுக்காகப் போராட தமிழ் தேசிய அமைப் புக்கள் ஏன் முன் வருவதில்லை?.

இந்தியாவில் சில கார்ப்பரேட் ஊடகங்கள் இடது சாரிகள் மீது அவதூறு செய்திகளைப் பரப்பி வருகின்றன. பொதுச்செயலாளர் பிரகாஷ் காரத்துக்கும், சீத்தாராம்யெச்சூரிக்கும் இடையே பிரச்சினை உள்ளதாக தவறான செய்திகளை வெளியிட்டு வருகின்றன.கம்யூனிஸத்தை விட்டு சமூக ஜனநாயகக் கட்சியாக மாறவேண்டும் என இடதுசாரிகள் மீது அத்தகைய ஊடகங்கள் கருத்து தெரிவித்துள்ளன. இதன் மூலம் ஊழல், சுரண்டலுக்கு எதிராக மிகப்பெரிய போராட்டங்கள் எதுவும் உருவாகக் கூடாது என அவை விரும்புகின்றன என்றார்.

**நன்றி: தி இந்து**

# யானை இருந்தாலும் ஆயிரம் பொன்! இறந்தாலும் ஆயிரம் பொன்!!

உலகில் ஆபிரிக்க கண்டத்திலேயே அதிகளவிலான யானைகள் வாழுகின்றன. ஆனால் சட்டவிரோதமாக யானைகளைக் கொல்பவர்களால் அந்த யானைகள் இப்பொழுது பெரும் அழிவை எதிர்நோக்கி வருகின்றன. பெறுமதிமிக்க யானைத் தந்தங்களை திருடி விற்பவர்களால் (Poachers) இந்த யானைகள் பெருமளவில் வேட்டையாடப்படுவதே அதற்குக் காரணம்.

'த எக்கோனோமிஸ்ற்' சஞ்சிகை 2014 நொவம்பர் 08ஆம் திகதி வெளியிட்டுள்ள ஒரு தகவலின்படி, கடந்த மூன்று வருடங்களில் சுமார் 100,000 (ஒரு இலட்சம்) யானைகள் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளன. யானைகள் அதிகமாக வாழும் ஆபிரிக்க நாடான தன்சானியாவில் ஆளும் கட்சியினருடன் நெருங்கிய தொடர்புள்ளவர்களே இந்த நாசகாரச் செயலில் ஈடுபட்டுள்ளதால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அந்நாட்டு அரசு தயக்கம் காட்டுவதாக கூறப்படுகிறது.

*

முன்பக்கத்தொடர்ச்சி…

ரீதியிலான ஒரு நிலைப்பாடு கிடையாது என்பதே உண்மையாகும்.

ஆனால் இலங்கையின் சாதாரண மக்களைப் பொறுத்த வரையிலும், அவர்களை உண்மையாகப் பிரதிநிதித்துவம் செய்கின்ற முற்போக்கு – ஜனநாயக சக்திகளைப் பொறுத்த வரையிலும் இந்தப் பிரச்சினைகள் சம்பந்தமான நிலைப்பாடும், அணுகுமுறைகளும் என்ன என்பது ஒரு முக்கியமான விடயம். இந்த விடயங்கள் குறித்து அந்த சக்திகள் ஒரு தெளிவான நிலைப்பாட்டை கொண்டிருக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறைமையைப் பொறுத்த வரையில், ஒரு தனி மனிதனிடம் அதிகாரம் குவிக்கப்பட்டிருக்கும் இந்த முறைமை நிச்சயமாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் நமது நிலைப்பாடு. அதுமட்டுமின்றி, இந்த முறைமையையும், இன்னும் சில மக்கள் விரோத சரத்துகளையும் கொண்டிருக்கும் 1978ஆம் ஆண்டின் இன்றைய அரசியல் சாசனம் முற்றாக மாற்றப்பட்டு, அதனிடத்தில் ஒரு ஜனநாயக ரீதியிலான அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வர வேண்டும் என்பதுதான் எமது கருத்தாகும்.

இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக நிற்பதால், அதன்பின்னர் ஒருவர் இரண்டு தரத்துக்கு மேல் போட்டியிடலாமா என்ற சர்ச்சையில் இறங்குவது அர்த்தமற்றது. ஆனாலும் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் எத்தனை தரமும் போட்டியிடலாம் என்ற திருத்தத்தை அரசியல் அமைப்பில் சேர்த்த 18ஆவது திருத்தச் சட்டத்தை நாம் எதிர்ப்பதுடன், அதை இடதுசாரிக் கட்சிகள் ஆதரித்துவிட்டு, பின்னர் 'கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வது – போல' தமது தவறுக்கு வருத்தம் தெரிவித்ததையும் கண்டிக்காமல் இருக்க முடியாது.

மேற்சொல்லப்பட்ட விடயங்கள் அடிப்படையான கொள்கை நிலைப்பாடு சம்பந்தப்பட்டவை. அதேநேரத்தில், மாற்றங்கள் என்பவை திடீரென ஆகாயத்தில் இருந்து விழுபவையல்ல. எந்தவொரு மாற்றத்தினதும் கர்ப்பப்பையாக, இருக்கின்ற பழைய அமைப்புத்தான் இருந்து வந்திருக்கிறது. இதுதான் வரலாற்று யதார்த்தம்.

எனவே, இன்றிருக்கிற சூழலில் ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்ற நிலைமையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது. நாம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை ஏற்காததால், அதைப் புறக்கணிப்பது சரியானதாக இருக்குமா?

இல்லை என்பதுதான் எமது பதில். அரசாங்கக் கட்சியைத் தவிர எதிர்க்கட்சிகள் யாவும் ஜனாதிபதி தேர்தலை புறக்கணிப்பதாக முடிவெடுத்தால் நாமும் அதைப் புறக்கணிக்கலாம். ஆனால் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை மாற்றச் சொல்லி பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும், ஏனைய எதிர்க்கட்சிகளும் வலியுறுத்திக் கொண்டே, அவை எல்லாம் ஒரே அணியாகச் சேர்ந்துகொண்டு ஜனாதிபதி தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்த முடிவெடுத்துள்ளன.

எனவே, இந்தக் கட்டத்தில் எமது கொள்கை சார்ந்த நிலைப்பாட்டை வலியுறுத்துவதற்காக ஜனாதிபதி தேர்தலை புறக்கணிப்பது அர்த்தமற்றது. ஏனெனில் இன்று பதவியிலிருக்கிற அரசாங்கமோ அல்லது புதிதாக பதவிக்கு வருகின்ற ஒரு அரசாங்கமோதான் இப்போதைய ஜனாதிபதி முறைமையை மாற்ற முடியும். அப்படிப் பார்க்கையில் ஐ.தே.க தலைமையிலான எதிரணி ஜனநாயகம் பற்றி எவ்வளவுதான் வாய்கிழிய கத்தினாலும், அவர்கள் தற்போதைய ஜனாதிபதி முறைமையை மாற்றுவார்கள் என்பது நிச்சயமில்லை. அதற்கான காரணங்கள் வருமாறு:

- ஐ.தே.க தான் இந்த நிறைவேற்று ஜனாதிபதி முறையை 1978இல் கொண்டு வந்தது. இன்றுவரை அந்தக் கட்சி தான் இந்த முறைமையைக் கொண்டு வந்தது தவறு என்று சுயவிமர்சன ரீதியாக ஏற்றுக் கொள்ளவோ, அதை மாற்ற வேண்டும் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கவோ இல்லை.

- ஐ.தே.க ஏகாதிபத்தியத்துக்கு சார்பான, மக்களுக்கு விரோதமான, உள்ளூர் பிற்போக்கு சக்திகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஒரு கட்சி என்ற வகையில், அதனது மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு இத்தகைய ஒரு எதேச்சாதிகார அரசியல் அமைப்பு தொடர்ந்தும் தேவை.

- 1977 பொதுத்தேர்தலின் போது, ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க, சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான 'சர்வாதிகார ஆட்சி'யை அகற்றி, ஜனநாய ஆட்சி ஒன்றைக் கொண்டு வரப்போவதாகவும், இலங்கையை சிங்கப்பூராக மாற்றப் போவதாகவும் சொல்லித்தான் ஆட்சிபீடம் ஏறியது. ஆனால் அதற்குப் பதிலாக ஆட்சிக்கு வந்ததும் சர்வாதிகார அரசியல் சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டு, எதிர்க்கட்சிகளையும், வெகுஜன அமைப்புகளையும் அடக்கியொடுக்கி, தமிழ் மக்களுக்கு மேல் இனவன்செயல்களை தூண்டிவிட்டு, இனப்பிரச்சினையை யுத்தமாக்கி, நாட்டை 17 வருடங்களாக சின்னாபின்னமாக்கி விட்டுத்தான் ஆட்சியைவிட்டு இறங்கியது. ஆகையால் இனிமேலும் கூட அது ஆட்சிக்கு வந்தால் அந்த வரலாறு மீளாது என்று சொல்வதற்கில்லை.

எனவே, ஜனாதிபதி தேர்தல் நிச்சயம் நடைபெறவுள்ளதால், முதலில் ஐ.தே.க தலைமையிலான ஏகாதிபத்திய சார்பு, பிற்போக்குவாத, இனவாத சக்திகள் ஆட்சிபீடம் ஏறாமல் பார்த்துக் கொள்வது

அவசியம். அதேநேரத்தில், தொடர்ந்தும் தற்போதைய அரசியல் சட்டத்தை மாற்றக்கோரும் இயக்கத்தையும் வலுவுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அரசியல் சட்டத்தை மாற்றுவதானால் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பங்கு உறுப்பினர்களின் வாக்குகள் தேவை. அத்தகைய ஒரு வாக்குப்பலம் இன்றைய அரசாங்கத்துக்குத்தான் உண்டு. எனவே அதை முன்னெடுப்பதற்கான சாத்தியமான நிலைமை இன்றைய அரசின் கீழ்தான் இருக்கிறது.

குறிப்பாக, அரசியல் அமைப்பை மாற்றக்கோரும் இயக்கத்தை அரசாங்கத்தில் இணைந்துள்ள இடதுசாரிக் கட்சிகளும், வெளியிலுள்ள இடதுசாரி சக்திகளும் இணைந்து முன்னெடுக்கலாம். அதற்கு ஜனநாயகத்தை நேசிக்கும் சகல சக்திகளினதும் ஆதரவையும் பெற்றுக்கொள்வதும் அவசியமானது. தற்போது நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஆளும் கட்சியின் வேட்பாளரை ஆதரிப்பதற்கு நிபந்தனையாக, அடுத்த ஜனாதிபதியின் பதிவிக் காலத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை உட்பட முழு அரசியல் சாசனத்தையும் மாற்றியமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முற்போக்கு – ஜனநாயக சக்திகள் வலியுறுத்தினால், அது ஒரு ஆக்கபூர்வமான செயற்பாடாக இருக்கும். *

# பிரித்தானியர் ஆட்சிக் கொடுமையை நினைவுபடுத்தும் கையூர் தியாகிகள்

இந்திய விவசாயிகளைத் திரட்டி பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடினார்கள் என்ற குற்றச்சாட்டில், இந்தியாவின் கேரள மாநிலத்திலுள்ள கையூர் கிராமத்தைச் சேர்ந்த 4 விவசாயத் தலைவர்களை பிரித்தானிய ஏகாதிபத்திய அரசாங்கம் 1943ஆம் ஆண்டு மார்ச் 29ஆம் திகதி தூக்கிலிட்டுப் படுகொலை செய்தது.

இந்திய மக்களைக் கொதித்தெழ வைத்த இந்தச் சம்பவத்தை மையமாக வைத்து, நிரஞ்சனா என்பவர் 'நினைவுகள் அழிவதில்லை' என்ற ஒரு அருமையான நாவலை பல வருடங்களுக்கு முதல் எழுதி வெளியிட்டார். இந்த நாவல் மலையாளம், தமிழ் உட்பட இந்திய மொழிகள் பலவற்றில் வெளிவந்து மக்களின் பலத்த அபிமானத்தைப் பெற்றது. இன்றும் அந்தத் தியாகிகளை நினைகூர்ந்து வருடாவருடம் 'கையூர் தியாகிகள் தினம்' இந்தியா முழுவதும் அனுஸ்டிக்கப்பட்டு வருகிறது.

16ம் பக்கத்தொடர்ச்சி...

அவர்களுக்கு இலங்கை அரசாங்கத்தால் தொந்தரவு ஏற்படாதா எனக் கேள்வி எழுப்பி, மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டார்.

அதாவது, இலங்கையில் மனித உரிமை மீறல் இருக்கிறது என்று கனடியப் பிரதமர் ஹார்பர் அங்கு போகாதபடியால் கனடாவுக்கு சட்டவிரோதமாக வந்த தமிழர்களையும் அங்கு திருப்பி அனுப்பக்கூடாது என்ற குதர்க்கத்தை வைத்தார். கனடா, இலங்கை பற்றிய கொள்கையை ஏன் இப்படிக் கையாள்கிறது என்பதற்கு பல காரணங்கள் உள்ளன என்பதைப் பார்க்காமல், தமது சட்ட விரோத காரியங்களை கனடிய அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என இவர்கள் கோருவது மிகவும் மோசமான சட்ட விரோத உணர்வாகும்.

இப்படிப் பல விடயங்கள் இன்று தமிழ் தேசியம் பேசுவோரால் அவர்களது சொந்த நாடுகளிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவர்களது தவறான நடைமுறைகளால்தான் தமிழினம் தமது சொந்த நாடுகளில் இரண்டாந்தரப் பிரசைகளாக வாழ நேரிட்டது என்பதை எப்பொழுதுதான் இவர்கள் உணரப் போகிறார்களோ தெரியவில்லை. *

## *தீராத நினைவு*




நம் கடந்த காலங்கள்
ஒரு தேர்ந்த ஓவியனின்
வரைபடப் புத்தகம் போன்றது.
தோன்றும் பொழுதுகளில்
எனக்குப் பிடித்த வர்ணம் தீட்டி
அழகு பார்ப்பதும் பின்பு
நினைவு மயிலிறகை அதற்குள்
சொருகி வைப்பதும்
எனக்கு வாடிக்கையானது.

நேற்று
நாம் பழகிய தருணங்களை
இரு பழக்கூடையில் நிரப்பி
ஒவ்வொன்றையும் இருவரும்
சுமந்த படி பிரிந்தோம்.
தனிமை பசித்திருக்கையில்
ஞாபகப் பழக்கூடையிலிருந்து
ஒவ்வொன்றாய்ப் புசிக்கக் கொடுத்தோம்
பழக்கூடை தீர்வதற்குள்
மீண்டும் நாம்
சந்திக்க வேண்டும்!

**- வி.யோகேஷ்**
**நன்றி : இன்மை**

# தமிழ் சமூகம் சட்ட விரோத உணர்வுள்ள சமூகமாக மாறி வருகின்றதா?

இலங்கையிலும், இந்தியாவிலும், வாழும் தமிழர்கள் தமது சட்டபூர்வமான உரிமைகளை அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் மறுத்து வருவதாக என்னதான் கூறிக்கொண்டாலும், தாமே சட்டத்தை மதிக்காமல் நடந்து கொண்டு வருவதால், தமது கோரிக்கைகள் சம்பந்தமாக பேசும் உரிமையை தார்மீகரீதியாக இழந்து வருகிறார்கள் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

இதற்கு கடந்த பல வருடங்களில் ஏற்பட்ட சம்பவங்கள் சாட்சியங்களாக இருந்தாலும், அண்மைய சில சம்பவங்களைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

அண்மையில் தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதாவுக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் சிறைத்தண்டனையும், அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது. இந்த வழக்கு 18 வருடங்களாக நடந்து வந்து, போதிய ஆதாரங்கள் நிரூபிக்கப்பட்டுத்தான் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் இருந்து தான் குற்றவாளி அல்லவென்று சொல்லி வாதாடி வழக்கை இழுத்தடித்து வந்த ஜெயலலிதா, தீர்ப்பு வழங்கப்படும் கடைசி நேரத்தில் தான் நோயாளி என்றபடியால் தனக்கு குறைந்த அளவிலான தண்டனை வழங்கும்படி நீதிமன்றத்தை கெஞ்சாத குறையாக கேட்டுக் கொண்டார். இதன் மூலம் தான் குற்றவாளிதான் என்பதை மறைமுகமாக அவரே ஒத்துக் கொண்டார்.

ஒரு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்க முடியாதென்றால், அதை எதிர்த்து வாதிடுவதற்கு சட்டப்படி எத்தனையோ வழிமுறைகள் ஏற்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஒரு கொலைகாரனுக்கு கூட தன்மீதான குற்றச்சாட்டை எதிர்த்து வாதிடுவதற்கு சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் நோக்கம், எவருக்காவது அநியாயமான முறையில் நீதி மறுக்கப்பட கூடாது என்பதுதான்.

ஆனால் ஜெயலலிதாவின் அ.இ.அ.திமு.க கட்சியினர் என்ன செய்தார்கள்? நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து சட்டத்தை தமது கைகளில் எடுத்துக் கொண்டு தெருக்களில் இறங்கி சண்டித்தனம் செய்தனர். தனியார் சொத்துக்களையும், பொதுச் சொத்துகளையும் சூறையாடினர். தி.மு.க தலைவர் கருணாநிதியின் வீட்டை கூட தாக்கினர். சட்டம் ஒழுங்கை சீர்குலைத்து தமிழகத்தின் இயல்பு வாழ்க்கையையே ஸ்தம்பிக்க வைத்தனர். ஜெயலலிதாவுக்கு பிணை வழங்கப்பட்ட பின்புதான் வன்செயல்களை கைவிட்டனர். பிணை வழங்காவிட்டால் இன்னமும் அது தொடர்ந்து கொண்டுதான் இருந்திருக்கும்.

அதேபோல, அண்மையில் போதை வஸ்து கடத்திய குற்றச்சாட்டில் இலங்கை நீதிமன்றம் ஒன்று 5 தமிழக மீனவர்களுக்கும், 3 இலங்கை மீனவர்களுக்கும் மரண தண்டனை வழங்கியபோது, தமிழக மீனவர்களை மீட்பதற்கான சட்ட வழிமுறைகள் இருந்தும், அதைவிடுத்து அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை முற்றிலுமாக விலக்கிக் கொண்டு அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என தமிழகத்தில் ஆர்ப்பாட்டங்களும் வன்முறைகளும் நடைபெற்றன. ஆனால் மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கை மீனவர்களுக்காக இலங்கையில் யாரும் வன்முறைகளில் ஈடுபடவில்லை.

தமிழக தமிழர்கள் மட்டுமின்றி, இலங்கை தமிழர்களுக்கும் இது பொருந்தும். இலங்கையில் புலிகள் இயக்கம் பாசிச – பயங்கரவாத செயல்களில் ஈடுபடத் தொடங்கிய பின்னர், இலங்கை தமிழர்களும் வன்முறை சிந்தனைக்கு ஆளானார்கள். குறிப்பாக புலிகள் அழிக்கப்பட முன்னரும், பின்னரும் புலம்பெயர் நாடுகளில் வாழும் புலி ஆதரவு சக்திகள் வன்முறையை ஒரு ஆயுதமாக கையாண்டு வந்திருக்கின்றனர்.

ஒர் உதாரணம், கடைசி யுத்த நேரத்தில் கனடாவில் மிகப்பெரிய அளவிலான ஆர்ப்பாட்டங்களை புலி ஆதரவு சக்திகள் மேற்கொண்டன. அதன்போது ஒரு உச்சக்கட்டமாக கனடாவின் மிக முக்கியமான கார்டினர் அதிவேக நெடுஞ்சாலையை (Gardiner Expressway) மறித்து குழப்பம் விளைவித்தனர். புலி ஆதரவாளர்களின் இந்த சட்ட மீறலைக் கண்டித்து கனடிய ஊடகங்களில் மக்கள் பலர் கருத்துத் தெரிவித்தனர்.

அதுமட்டின்றி, 'சண் சீ' என்ற கப்பலில் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கருதப்படுபவர்களால் ஒவ்வொருவரிடமும் பல இலட்சக்கணக்கான ரூபா பணம் வாங்கிக் கொண்டு நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் கனடாவுக்கு கடத்தி வரப்பட்டனர். இது ஒரு சட்டவிரோதமான நடவடிக்கை என்று தெரிந்தும் எவ்வித பயமுமின்றி அதைச் செய்தனர். அப்படி வந்தவர்களில் ஒவ்வொருவருடைய வழக்கையும் கனடிய அரசாங்கம் ஆராய்ந்து சிலருக்கு புகலிட உரிமையும், சிலரை திருப்பி இலங்கைக்கு அனுப்பும் நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகிறது.

ஆனால் அண்மையில் கனடிய ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த கனடிய தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு அமைப்பின் பிரதிநிதி, 'இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இருப்பதால்தான். கனடிய பிரதமர் அங்கு நடந்த பொதுநலவாய (கொமன்வெல்த்) மாநாட்டுக்குப் போகவில்லை. அப்படியிருக்க சண் சீ கப்பலில் வந்தவர்களைத் திருப்பி அனுப்பினால்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க..